## எந்தச் சூழ்நிலையிலும் தமிழ்நாட்டில்

# பா.ஜ.க.வை வரவிட மாட்டோம் என்று உறுதியாக நிற்கும் தலைவர்தான் நமது முதல்வர்!

## சென்னை கிழக்கு மாவட்டத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னெடுப்பில் துணை முதல்வர் பிறந்த நாள் விழாவில் நடிகர் கருணாஸ் பேச்சு!

**சென்னை, டிச.1-**

**சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர் தெற்கு பகுதி திமுக இளைஞரணி சார்பில் 'உதயம் 8 நெஞ்சில் உதயம் குடியிருப்பு! நேர்மை நமது உயிர்த் துடிப்பு' என்ற தலைப்பில் நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு மறுகட்டுமான பணி நடைபெறுகின்ற குடியிருப்பில் வசித்த 1085 குடும்பங்களுக்கு நல திட்டங்கள் வழங்கும் விழா. 23.11.2025 - ஞாயிற்றுக்கிழமை மாலை பி.கே.என். ஆடிட்டோரியத்தில் (அனிதா பள்ளி வளாகம்) மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில், எழும்பூர் தெற்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் இ.சூர்யா தலைமையில் நடைபெற்றது.**

இதில் முக்குலத்தோர் புலிப்படை தலைவர் நடிகர் கருணாஸ் ஆற்றிய சிறப்புரை வருமாறு:-

'சொல்லுக்கு முன் செயல்' என்பது தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின் வார்த்தைகள். வார்த்தைகளில் சொல்வதைவிட செயலில் செய்து காட்ட வேண்டும். அவ்வாறு செயலில் செய்து காட்டுபவர்களாகத்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கும் அடிமட்டத் தொண்டனில் இருந்து, இன்றைக்கு தமிழ்நாட்டை ஆட்சி செய்து கொண்டிருக்கும் எனது அருமை அண்ணன் தளபதியார் முதற்கொண்டு 'சொல்லுக்கு முன் செயல்'.

அந்த வகையில், நான் முதன் முதலில் துணை முதலமைச்சராக இருக்கும் அருமைச் சகோதரர் உதயா அவர்களை ஒரு ஓட்டலில் அவரது நண்பர் நடிகர் விஷால் அவர்களுடன் பேசிக் கொண்டிருக்கும்போதுதான் பார்த்தேன். அப்போது ஒல்லியாக இருந்தார். கண்ணாடி போட்டிருந்தார். அப்போது விஷால்தான் சொன்னார், "இவர் தளபதி பையன்" என்றார். சத்தியமாக அதற்கு முன் நான் அவரைப் பார்த்ததில்லை. தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள். அப்போது, நான் வணக்கம் வைத்து, கை கொடுத்தேன். நான் ஸ்நூக்கர் விளையாடிக் கொண்டிருந்தேன். அவர்கள் இருவரும் கல்லூரி நண்பர்கள். ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது நடிகர் சங்கத்தில் காவேரி பிரச்சினைக்காக உண்ணாவிரதம் இருந்தோம். அதில் அவர் கலந்து கொண்டார். அப்போது நான் அவரிடம் இரண்டு வார்த்தைகள் பேசியிருக்கிறேன். அதற்குப் பிறகு, இப்போது சமீப காலத்தில்தான் நான் உதயா அவர்களை பார்க்கிறேன்.

இதை எதற்காக சொல்ல வருகிறேன் என்றால், ஒரு செயலை செய்ய வேண்டும் முடிவு எடுக்கிறார். ஒல்லியாக இருந்தார். கண்ணாடி போட்டிருந்தார். அவர் நடிகனாக வேண்டும் என்று முடிவு எடுத்துவிட்டார். அதற்கு முன்பு படம் எடுக்கிறார். இன்னும் சொல்கிறேன், இன்றைக்கு ஒரு நடிகர் இருக்கிறார் அல்லவா… அந்த நடிகருக்கு பெரிய சம்பளத்தை கொடுத்து, அவரது சம்பளத்தை உயர்த்தியதே இதே ரெட் ஜெயன்ட் நிறுவனம்தான். அதையும் யாரும் மறந்துவிடக் கூடாது.

உதயா அவர்கள் ஒன்றும் புதிதாக நடிக்க வரவில்லை. அண்ணன் தளபதி அவர்கள், எத்தனையோ திரைப்படங்கள், தொலைக்காட்சித் தொடர்களில் நடித்திருக்கிறார். அதற்கு முன்பாக, தமிழ் சினிமாவையே உலக அரங்கில் தலைநிமிர வைத்த ஒரு கதாசிரியராக - ஒரு எழுத்தாளராக - ஒரு பாடலாசிரியராக விளங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பேரன் நடிப்பதில் நாம் ஒன்றும் ஆச்சரியப்பட வேண்டிய அவசியமில்லை.

ஆனால், இதில் என்ன தெரிந்து கொள்ள வேண்டும் என்றால், இன்றைக்கு இருக்கும் நடிகர் எல்லாம் சுமார் 6, 7 உப்புமா படம் நடித்துவிட்டு, அதற்குப்பிறகுதான் நல்ல படமே நடிக்க ஆரம்பித்தார்கள். ஆனால், அவருடைய முதல் படமான "ஓகே ஓகே" படத்திலேயே ஒரு வெற்றிப் படத்தை கொடுத்தவர்தான் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

### அ.தி.மு.க. போட்ட தடை

நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, அன்றைய எதிர்க்கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் இருந்தபோது, அன்றைக்கு தளபதியார் அவர்கள் நடத்திய இளைஞர் படையை, அடுத்தகட்டமாக உதயநிதி அவர்களிடம் அந்தப் பொறுப்பை கொடுக்கிறார்கள். அவர் அதை செயல்படுத்துவதற்கு ஊர் ஊராக செல்லும்போது அன்றைக்கு ஆட்சியில் இருந்த எடப்பாடி தலைமையிலான அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அதற்கு எத்தனை தடைகள் போட்டார்கள் என்பது எனக்குத் தெரியும்.

அப்போது நான் அவருக்கு வாழ்த்துச் சொல்லலாம் என்று நினைத்தேன். என்னதான் ஒரு மிகப்பெரிய இயக்கத்தின் இளைஞரணிச் செயலாளராக பொறுப்பேற்றிருக்கிறார். அவரை பார்த்து வாழ்த்து சொல்லலாம் என்று நினைத்தேன். "அதெல்லாம் செய்யக் கூடாது. அதெல்லாம் போகக்கூடாது. இரட்டை இலையில் நின்று வெற்றி பெற்றிருக்கிறாய்" என்று சொல்லி மிரட்டிப் பயமுறுத்தினார்கள். ஆனால் இன்றுவரை அந்த வருத்தம் எனக்கு இருக்கிறது. இன்றைக்கு ஒட்டுமொத்தமாக அந்தப் பொறுப்பை ஏற்றதில் இருந்து, இந்த அ.தி.மு.க. அன்றைக்கு அவருக்கு அவ்வளவு தடைகள் போட்டிருந்தாலும்கூட, அந்தத் தடைகளை எல்லாம் தகர்த்தெறிந்து, ஒற்றைச் செங்கலை எடுத்து ஒட்டுமொத்த உலகத்தையே உற்றுப் பார்க்க வைத்தவர் தான் இந்த உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

ஒரு சினிமா நிறுவனம் துவங்குகிறார். அதை லாபகரமாக இன்று வரை நடத்திக் கொண்டிருக்கிறார். அதன் பொறுப்பை இன்னொருவரிடம் கொடுக்கிறார். 'திண்டுக்கல் சாரதி' படத்தில் ஒரு வசனம் இருக்கும். என் மனைவிடம் நான் சொல்வேன், "என்ன அஜித்… அஜித் என்கிறாய். என்னைவிட கொஞ்சம் கலராக இருக்கிறார். அவ்வளவுதானே… அதே போன்றுதான், என்ன நடிகர்… நடிகர்… எங்கள் ஆளும் நடிகர்தான். என்ன இவரைவிட கொஞ்சம் நன்றாக நடனம் ஆடுவாய். அவ்வளவுதான்… வேறு ஒன்றும் பெரிதாக இல்லை. அவ்வாறுதான் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். உங்களுடைய நடிப்பு அனைவருக்கும் தெரியும். உதயா அவர்களும் மிகச் சிறந்த நடிகராக, மகேந்திரனும் அவரும் சேர்ந்த படங்களில் அற்புதமான நடிப்பை வெளிப்படுத்தியிருப்பார். அவர் இன்றைக்கு மக்களுக்கான பணியை மேற்கொண்ட காரணத்தினாலேதான் அதிலிருந்து விடுபட்டிருக்கிறார்.

நீங்கள் 100 படம் நடித்து அதில் எடுக்கும் பெயரை, வெறும் 10, 12 படம்… இறுதியாக அவர் நடித்தாரே, 'மாமன்னன்' திரைப்படம்… அந்தத் திரைப்படத்தில் ஒடுக்கப்பட்ட நசுக்கப்பட்ட மக்களுக்கான ஒரு குரலாக - குரலற்ற மனிதர்களின் குரலாகத்தான் அந்தக் கதாபாத்திரத்தை அவர் ஏற்று நடித்திருக்கிறார். எனவே சினிமா படங்களிலேகூட மக்களுக்கான பணியைச் செய்யும் - மக்களுக்கான பணியாளர்களாக உருவாகும் எண்ணங்களை அடுத்த தலைமுறைக்கு விதைக்க வேண்டும் என்று வேலை செய்பவராகத்தான் மாண்புமிகு துறை முதலமைச்சர் அருமைச் சகோதரர் உதயா அவர்கள் இருக்கிறார் என்பதை நான் உங்களிடம் சொல்லிக் கொள்கிறேன்.

என்னுடைய தெய்வத் திருமகனார் ஒன்று சொல்வார், "வீரமற்ற விவேகம் கோழைத்தனம். விவேகமற்ற வீரம் முரட்டுத்தனம்" என்று சொல்வார். ஆனால், அருமைச் சகோதரர் உதயா அவர்கள், வீரமும் விவேகமும், விவேகமும் வீரமும். எந்தச் செயலை செய்தாலும், அதை எடுத்து முடிக்கும் ஒரு உறுதியான செயல்பாட்டில் நடத்துபவராகத்தான் அவர் செயல்படுகிறார்.

இப்போது திடீரென்று துணை முதலமைச்சர் அவர்களை புகழ்ந்து பேசுகிறோம். ஏதோ அவரை காக்கா பிடிக்கிறோம் என்று கிடையாது. நான் சந்தித்த முதல் அரசியல் தலைவர் தளபதியார்தான். நம்முடைய கவி அவர்களுக்குத் தெரியும். நம்முடைய ஆர்ட்ஸ் கல்லூரியில் நாங்கள் எல்லாம் நிகழ்ச்சி நடத்தியிருக்கிறோம். அன்றைக்கு பார்த்தோம். செக்கச் சிவந்த நிறத்தில், சுருட்டை முடியுடன், வெள்ளை நிற வேட்டி சட்டையுடன் அந்த அன்பத்தில் இருந்து அழைத்துச் சென்றது எல்லாம் இன்றும் எங்களுக்கு நியாபகம் இருக்கிறது. அந்தத் தளபதியாரை நான் எவ்வாறு இன்று வரை அன்புடன் நேசிக்கிறேனோ, அதே நேசிப்பு இறுதிவரை உதயா அவர்களுக்கும் இருக்கும் என்பதை நான் இந்த மேடையில் சொல்லிக் கொள்கிறேன். ஏன் என்றால், நீங்கள் படம் காட்டுவது வேறு.

இவ்வளவு பெரிய 75 ஆண்டுகால கட்சியில் ஒருதுணை முதலமைச்சராக இருக்கிறார். அப்பேர்பட்ட வசதி வாய்ப்புடன் வளர்ந்த ஒரு செல்வக் குழந்தைதான். ஆனால் அவருடைய செயல்பாடுகளைப் பாருங்கள். அவர் மக்களிடம்



பழகுவதைப் பாருங்கள். அவர் பேசும் பேச்சைப் பாருங்கள். அவ்வளவு எளிமையாக, தன்னை ஒரு சாமானியனாக, அதாவது மக்கள் உணர வேண்டும் என்ற எளிமையான ஒரு பேச்சு. ஒரு அரசியல் தலைமைக்கு என்ன முக்கியம் தெரியுமா? நினைத்த நேரத்தில் தொண்டர்களும், பொறுப்பாளர்களும் அந்தத் தலைவனை சந்திப்பவர் தான் தலைவன். உங்களைப் பார்ப்பதற்கே நாங்கள் ரிசார்ட்டுக்கு வர வேண்டும். சார்ட்டட் விமானம் பிடித்து வர வேண்டும் என்றால், நீங்கள் எவ்வாறு தலைவராக இருக்க முடியும். நாங்கள் நல நிதி திட்டம் கொடுப்பதைக் கூட வீட்டிற்கு அழைத்துதான் கொடுப்போம் என்றால், அது எவ்வாறு தலைமையாக இருக்க முடியும்.

எனவே, ஒன்றை மட்டும் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். நானும் நடிகன்தான். நடிகனை நடிகனாகத்தான் நீங்கள் பார்க்க வேண்டும். ஏன் என்றால், நடிகனாகிய நான், மக்களுக்கான பணி செய்ய வந்திருக்கிறேன்… வந்திருக்கிறேன் என்று சொல்கிறோம் அல்லவா… இத்தனை ஆண்டுகாலம் என்ன செய்து கொண்டிருந்தீர்கள் என்ற கேள்வி இருக்கிறது அல்லவா… நான் சிறிய நடிகர். நான் சம்பாதித்த பணத்தில் கிட்டத்தட்ட 152 மாணவ மாணவிகளை குறிப்பாக முகாமில் தங்கியிருந்த இலங்கை அகதி மாணவ மாணவிகளை 2009-இல் படிக்க வைத்தவன் கருணாஸ். அதற்குப் பிறகுத்தானே இன்றைக்கு நிறைய நடிகர்கள் செய்கிறார்கள். எனவே, இது எதையும் நான் திட்டமிட்ட செய்வதில்லை. சட்டியில் இருந்தால் அகப்பையில் வரப்போகிறது. ஆனால் சட்டியே இல்லையென்றால் நாம் ஒன்றும் செய்ய முடியாது.

எனவே, இன்றைக்கு நடக்கும் அரசியல் என்பது சினிமாவில் தனக்கு இருக்கும் மக்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி மிக எளிமையாக மாபெரும் இந்த இயக்கத்தை குறை சொல்லி - மக்களுக்கு விரோதமான பேச்சுகளை பேசி - அதன் மூலமாக ஒரு சுயநல அரசியலை ஆதாயம் தேட நினைக்கும் அவருக்கு நான் ஒன்றே ஒன்று மட்டும் சொல்லிக் கொள்கிறேன். 'புலிக்கு பதுங்கவும் தெரியும். பாயவும் தெரியும். ஆனால், பயப்படத் தெரியாது.' நீங்கள் சோசியல் மீடியாவில் சொல்வதற்கெல்லாம் ஒரு குரூப் வைத்துக் கொண்டு, கெட்ட கெட்ட வார்த்தைகளில் பேசினால் நாங்கள் டிஸ்டர்ப் ஆகிவிடுவோம் என்று நினைக்காதீர்கள். ஏன் என்றால், கெட்ட வார்த்தைக்கே அகராதி போட்டவர்கள். அதனால் இந்த சின்னச் சின்ன பசங்களை வைத்துக் கொண்டு, நீங்கள் அப்படி, இப்படி… என்னை கூவத்தூர் மாமா என்று சொன்னால், அவ்வாறு செய்திருந்தால் மாமா என்றுகூட செல்வேன். செய்யாத நான், சொல்பவனை மாமா ஆக்கிவிடுவேன். அவ்வாறு நீ அங்கு சென்றால், நான் அடுத்த இடத்திற்கு செல்ல வேண்டி வரும்.

எதற்காக இதை சொல்ல வருகிறேன் என்றால், இங்கே வரும்போது நானும் தம்பி பிரசன்னா அவர்களும் பேசும்போது சொன்னார்கள். இது போன்று, பள்ளிகளை தொடங்கப்போகிறோம்; வீடு கட்டப்போகிறோம்; நிலம் கொடுக்கப்போகிறோம்.

எனக்கும் 55 வயதாகிவிட்டது. 1970-லயே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், இந்தியாவிலேயே பள்ளிக் கல்லூரிகளை உருவாக்கியதில் இருந்து, நிலம் இல்லாத விவசாயிகளுக்கு சொந்தமாக நிலம் கொடுத்து, இவ்வாறு நீங்கள் நினைத்தே பார்க்க முடியாது. நீங்கள் அல்ல, இந்தியாவிலேயே முடியாது. இந்தியாவிலேயே அவரைத் தாண்டிய ஒரு அரசியல் சித்தாந்தத்தை - அரசியல் சிந்தனையை மக்களுக்கான எதிர்கால திட்டங்களை தீட்டும் ஒரு செயல்வீரனை நீ பார்க்கவே முடியாது. 55 வருடம் கழித்து, இப்போது புதிதாக நாங்கள் வந்தால், வீடு கட்டித் தருவோம் என்கிறார்கள். நாங்கள்தான் முழுவதுமாக கட்டி கொடுத்துவிட்டோமே… இன்னும் கொஞ்சம்தான் இருக்கிறது. அதாவது, வீடுகூட முன்பெல்லாம் ஆண்கள் பெயரில் கொடுத்தார்கள். அவர்கள் அது, இது என்று ஏதாவது கடன் வாங்கி அழித்துவிடுகிறார்கள் என்று சொல்லி, தளபதி அவர்கள் அதையும் பெண்கள் பெயரில்தான் வீடெல்லாம் பதிவு செய்ய வேண்டும். கணவர் பெயரில் கிடையாது என்றுவிட்டார்.

### இந்தியாவிற்கே முன்னோடியான தமிழ்நாட்டின் முதலமைச்சர்!

இந்தியாவிற்கே முன்னோடியான தமிழ்நாட்டின் முதலமைச்சராக மாண்புமிகு தளபதி அவர்கள் இருக்கிறார் என்பதை பெருமைக்காகவோ, உங்களிடம் கை தட்டல் வாங்க வேண்டும் என்பதற்காகவோ இல்லை. இதை எங்கு வேண்டுமானாலும், தேவைப்பட்டால் ஐ.நா. சபையில் சென்றுகூட திராவிட இயக்கத்தின் செயல்திட்டங்களை செயல்படுத்தும் எனது அருமை அண்ணன் தளபதியார் அவர்களுடைய புகழை நான் பேசுவேன். ஏன் செய்திருக்கும் திட்டங்கள், காரியங்கள் அவ்வாறு.

இப்போது S.I.R. என்று ஒன்று இருக்கிறது அல்லவா… சுப்பிரமணிய சுவாமி அவர்களை எனக்கு பிடிக்கும். ஏன் பிடிக்கும் என்றால், பார்லிமென்ட்-இல் எங்கள் ஐயா பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் சிலை வைத்தவர் அவர்தான். அதனால் அவரை எனக்கு கொஞ்சம் பிடிக்கும். அவர் இப்போது இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு அறிக்கையில் சொல்லியிருக்கிறார். "S.I.R. படிவத்தை, நம்முடைய நாட்டின் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், அமித்ஷா உள்ளிட்டு யாருடைய துணையும் இல்லாமல் தனியாக உட்கார்ந்து நீங்கள் நிரப்பி, உங்களுக்கு ஓட்டு இருக்கிறது என்று சொல்ல வைத்துவிட்டீர்கள் என்றால், நான் இந்த அரசியலை விட்டே சென்றுவிடுகிறேன்" என்றிருக்கிறார். அவர் சாதாரண ஆள் கிடையாது. ஐயருக்கு ஐயர் அவர்.

இப்போது வருவதற்கு முன்னர், என் மனைவியிடம் கேட்டேன். என்ன கிரேசி இவ்வாறு சொல்கிறார்களே, நமக்கு ஓட்டு இருக்கிறதா என்று கேட்டேன். சந்தேகமாகத்தான் இருக்கிறது என்கிறாள். எனக்கே சந்தேகம்தானாம்.

ஏன் என்றால், நாமெல்லாம் நாடோடி வாழ்க்கை. நாம் எங்கோ பிறந்தோம்; எங்கோ வளர்ந்தோம். ஏதோ இந்த சென்னையை நம்பி வந்தோம். இந்தச் சென்னை இந்த கருணாஸை உருவாக்கியது. அதனால் நான் என்றைக்கு இந்த சென்னைக்கு நன்றியாக இருப்பேன். ஏன் என்றால், என் ஊரில் என் அப்பா, அம்மா எனக்கு வைத்த பெயர் கருணாநிதி. 'நிதி' பற்றாக்குறையில் 'நிதி'யை தூக்கி விட்டேன். வெறும் 'கருணா' என்று வைத்துக் கொண்டேன். என்னுடைய அப்பா பெயர் சேதுத் தேவர். எனவே, S-ஐத் தூக்கி பின்னர் போட்டுக் கொண்டேன், "கருணாஸ்". நன்றாக இருக்கிறதே… நாம் இதையே வைத்துக் கொள்வோம் என்று வைத்துக் கொண்டேன். ஆனால் இந்த கருணாஸ் என்ற ஒரு பாடகனை, ஒரு இசையமைப்பாளனை, ஒரு நடிகனை, ஒரு தயாரிப்பாளனை, ஒரு விநியோகஸ்தனை, ஒரு முக்குலத்தோர் புலிப்படையின் தலைவனை, ஒரு சட்டமன்ற உறுப்பினரை, வரும் சட்டமன்றத்தில் தளபதியார் புகழை பாடுபவனை உருவாக்கியது சென்னை. இந்தச் சென்னை தான் என்னை உருவாக்கியது. அதனால் நான் பிறந்த ஊருக்கெல்லாம் விசுவாசமாக இருக்க மாட்டேன். சென்னைக்குத்தான் மட்டும்தான் விசுவாசமாக இருப்பேன். நிறைய பேர் சொல்கிறார்கள், சென்னை எங்களுடையது… சென்னை எங்களுடையது என்று. 'சென்னை எங்களுடையதும்தான்'. ஏனென்றால், நாங்கள் இங்கேதானே உருவாகி இருக்கிறோம். இங்கேதானே வளர்ந்திருக்கிறோம்.

நான் முதலில் பார்டர் தோட்டத்தில் இருந்தேன். அதற்குப் பிறகு, கோடம்பாக்கம் சென்றேன். அதற்குப் பிறகு, திருவல்லிக்கேணி - நல்லதம்பி தெருவில் இருந்தேன். இவ்வாறு நான் எங்கெங்கு இருந்தேன் என்றே எனக்கு தெரியாது. முதல் முதலில் நான் ஓட்டு போடும்போது அண்ணா நகரில் இருந்தேன். இப்போது அவர்கள் என்ன கேட்கிறார்கள்? அண்ணா நகரில் எப்போது இருந்தீர்கள்? அண்ணா நகரில் இருக்கும்போது எங்கு ஓட்டு போட்டீர்கள்? அதற்கு முன்பு எங்கு இருந்தீர்கள்? அங்கு இருக்கும்போது உங்களுக்கு ஓட்டு இருந்ததா? நாமே வாடகை வீட்டில், ஆணி அடித்தால் வெளியே செல்லுங்கள்; பைப்பை அதிகமாக திறந்து விட்டால் வெளியே செல் என்று சொல்லும் இந்தச் சென்னையில், நாம் எங்கே சென்று என்ன செய்வது. எனவே, இதிலிருந்து நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

### இது எவ்வாறு ஜனநாயக நாடு?

அதைத்தான் அன்றைய S.I.R. கூட்டத்தில் தளபதியார் அவர்கள் மிகவும் தெளிவாக சொன்னார்கள். நம்முடைய ஓட்டு உரிமைகளை பறிப்பது என்பது, நமது குடியுரிமையைப் பறிப்பதற்கு சமமானது. நாம் இந்த நாட்டின் பிரஜையே இல்லை என்பதுதான், இதில் இருக்கிறது. ஓட்டுப் போடுவதற்கு உரிமை இல்லை என்றால், உயிர் சென்றதற்கு சமம்தானே… ஓட்டு போடும் உரிமை இல்லை என்றால், இது எவ்வாறு ஜனநாயக நாடு?

இரண்டு வருடங்களுக்கு முன்பு, நான் ஓட்டுப் போட்டேன். அந்த ஓட்டு வாங்கிதான் இன்றைய நாட்டின் பிரதமர் இருக்கிறார். அந்த ஓட்டு செல்லாது என்றால், அந்த பிரதமர் பதவியும் செல்லாதுதானே… நான் ஓட்டு போட்டு தானே நீங்கள் வென்றீர்கள். நாம் தானே ஓட்டு போட்டோம். எந்த கட்சிக்கோ ஓட்டு போட்டோமா, இல்லையா… இரண்டு வருடங்கள்தானே ஆகிறது. அன்றைக்கு அவ்வாறு ஏற்றுக் கொண்டு இன்றைக்கு திடீரென்று ஒரு சிறப்புத் தீவிர வாக்காளர் திருத்தம் என்று கொண்டு வந்து நம்முடைய வாக்குகளை நீக்கிவிட்டு, வட இந்தியாவில் இருந்து வந்து வேலை செய்பவர்களை…

அவர்களுக்கு என்ன? ஏதாவது கேட்டீர்கள் என்றால், "பி.ஜே.பி., மோடி ஜி, க்யா ஜி, பானி பூரி ஜி…" இதைத்தவிர அவர்களுக்கு வேறு என்ன தெரிகிறது. என்ன, நாம் வேலை செய்ய வேண்டிய இடத்தில் அவர்கள் வேலை செய்கிறார்கள்.

எங்கள் ஊரில் ஒருவன் செல்கள் சூளை வைத்திருக்கிறான். என்னடா, அனைவரையும் வட இந்தியாவில் இருந்து அழைத்து வந்து வைத்திருக்கிறார் என்று கேட்டேன். இல்லடா, இவர்கள் என்றால் கொஞ்சம் ரேஷன் அரிசி வாங்கிக் கொடுத்துவிட்டு, வெங்காயம், தக்காளி வாங்கி கொடுத்து விட்டால் நாள் முழுவதும் வேலை செய்கிறான். நம் ஆட்கள், அதை கொடு… இதை கொடு… மாலை நேரம் ஆனால் சரக்கு வாங்கி கொடு என்கிறார்கள். சரியாக வராது. பராமரிப்பு செய்ய முடியாது என்கிறான். எனவே, ஊசி இடம் கொடுத்தால்தானே, நூல் உள்ளே செல்லும். எனவே நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

நம்முடைய நாடு - நம்முடைய மண் - நம்முடைய மொழி - இந்த நாட்டையும் - மண்ணையும் - மொழியையும் காப்பதற்காக 75 ஆண்டு காலங்கள், விளிம்பு நிலை மக்களுக்காக - அடிமட்டத்தில் இருக்கும் மக்களுக்காக - பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட - சிறுபான்மையினருக்காக - மலை ஜாதி மக்களாக வாழும் தாழ்த்தப்பட்ட மக்களாக இருக்கும் அனைத்து மக்களுக்குமான ஒரே கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம் என்ற ஒரு கட்சி மட்டும்தான். அந்த இயக்கத்தை வழிநடத்தும் முதலமைச்சராக, அனைவரையும் வழிநடத்துபவராக…

அன்றைக்கு ஒரு ஒன்றியச் செயலாளர் பார்க்கிறார். அவருடைய அப்பா, அண்ணாவின் காலத்தில் இருந்து - தலைவர் கலைஞர் காலத்தில் இருந்து கட்சியில் இருப்பவர். உடனே போன் போடு. அவ்வாறு, போன் போட்டால் அழுகிறார். அடுத்த நாளே அவர் முதலமைச்சருடன் புகைப்படம் எடுத்துச் செல்கிறார். உங்களால் முடியுமா… நீங்கள் புகைப்படம் எடுக்க வேண்டும் என்றால், சார்ட்டட் ஃபிளைட் பிடித்துச் செல்ல வேண்டும்.

### அசைக்க முடியாத நம்பிக்கை!

இன்றைக்கு நான் ஒரே ஒரு விஷயத்தை சொல்கிறேன். நாம் எல்லாம் மனிதர்கள்தான். இன்றைக்கு இருப்போம்; நாளைக்கு சென்று விடுவோம். ஆனால், நமது சந்ததிகள் இந்த மண்ணில் வாழ வேண்டுமானால் - நீ பெற்ற பிள்ளைகள் இந்த மண்ணில் வாழ வேண்டும் என்று நீ நினைப்பேயானால் - நீ இன்றைக்கு வாயைக் கட்டி வைத்தே கட்டி சேர்த்து வைத்திருக்கும் செல்வங்கள் சொத்துக்கள் அத்தனையும் காக்கப்பட வேண்டும் என்று நீ நினைத்தால் - உன்னை காக்கும் ஒரு தலைவராக தளபதி அவர்கள் மட்டும்தான் இருப்பார். அவர்தான் இந்த மண்ணிற்கான ஒரு தலைவராக - மக்களுக்கான ஒரு தலைவராக - மொழிக்கான ஒரு தலைவராக - இந்த மண்ணுக்கான ஒரு தலைவராக - என்றைக்கும் உங்களில் ஒருவனாக இருக்கும் தளபதியார் மட்டும்தான் இருப்பார் என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது.

வாரிசு அரசியல்… வாரிசு அரசியல். என்ன வாரிசு அரசியல்? இப்போது, நான் ஒரு பாடகர்; என் மனைவி ஒரு பாடகி; இரண்டு பேரும் காதலித்து திருமணம் செய்து, பிள்ளை பெற்று, அவ்வாறு பெற்ற பிள்ளையும் பாடகர்; அவரும் நடிகர்; இதில் என்ன பிரச்சினை? இப்போது நடிகர் இருக்கிறார் அல்லவா… வருங்கால நடிகருடைய அப்பா யார்? ஒரு இயக்குனர்; அவருடைய அம்மா யார்? ஒரு பாடகி; அவருடைய மகன் யார்? ஒரு இயக்குனர்; ஒரே குடும்பம் தான். அவர் நடிக்கலாம்; அவர் அப்பா படம் இயக்கலாம்; அவர் மகன் படம் இயக்கலாம்; அவர்கள் அம்மா பாடலாம். ஆனால், தளபதி யாருடைய மகன் உதயநிதி மட்டும் துணை முதலமைச்சராக வரக்கூடாது என்றால், இதில் என்ன நியாயம் இருக்கிறது. "கேட்கிறவன் கேனை என்றால், கேப்பையில் நெய் வடிகிறது" என்று சொல்வீர்களா… சற்று புரிதலோடு பேசுங்கள். அடிப்படையாகவே உங்களிடம் தவறு இருக்கிறது. பிறகு என்ன நீங்கள் இன்னொருவரை சொல்கிறீர்கள்.

நான் மீண்டும் ஒருமுறை சொல்கிறேன். இன்றைக்கு ஒரு நல்ல ஆட்சியின் கீழ் நாம் இருக்கும் இந்தத் தருணத்தை வரும் காலங்களில் நாம் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லையென்றால், நமது தலைமுறைகள் அனாதைகளாக ஆக்கப்படுவார்கள் என்பதை மட்டும் நீங்கள் மறந்து விடாதீர்கள்.

### ஜம்புத் தீவு பிரகடனம்!

மாமன்னர்கள் மருது பாண்டியர்கள் இருந்தார்கள் அல்லவா… அதில் சின்னவர் சின்னமருது. அவர் ஒரு ஜம்புத்தீவு பிரகடனம் 1801-இல் அறிவித்தார். அந்த ஜம்புத்தீவு பிரகடனத்தை, திருச்சி மலைக்கோட்டையிலும், ஸ்ரீரங்கம் கோயிலிலும் ஒட்டினார். என்ன சொன்னார்? அன்றைக்கு இருக்கும் பாளையக்காரர்கள், குறுநில மன்னர்கள், முகமதியர்கள் அனைவரும் ஒன்றாக சேர்ந்து, வெள்ளையனை விரட்டி அடிப்போம் என்று அறை கூவல் விடுத்தார். ஒட்டுமொத்த வெள்ளையர்களுக்கு அடிமையாக இருந்த அந்தக் காலகட்டத்தில், ஒட்டுமொத்த இந்தியாவிலேயே ஒரே ஒரு கழகக்காரனாக - ஒரே ஒரு புரட்சியாளனாக, ஒட்டுமொத்த சிறுபான்மையினர்களையும் - பிற்படுத்தப்பட்டவர்களையும், ஜாதி, மதங்களுக்கு கடந்து மக்களைத் திரட்டி, 'வெள்ளையனே வெளியேறு' என்று சொல்லி சண்டையிட்டு, வெள்ளையனை வெற்றி பெற்றவர்கள் அந்த மருது சகோதரர்கள் என்பதை யாரும் மறந்து விட முடியாது.

இதை எதற்காக சொல்கிறேன் என்று சொன்னால், அந்த ஜம்புத்தீவு பிரகடனத்தைப்போல், வரும் காலங்களில் இந்த தமிழ் மண் - இந்த தமிழ் மொழி - இந்த தமிழ் மக்கள் - இந்த தமிழ் தேசம் காக்கப்பட வேண்டும் என்று சொன்னால், அன்றைக்கு ஒட்டுமொத்த மக்களையும் ஒருங்கிணைத்து, அதை வழிநடத்தி, அந்தக் காலகட்டத்திலும் - எந்த நிலையிலும் - எந்த சூழ்நிலையிலும் - தமிழ்நாட்டில் பி.ஜே.பி.யை வரவிடமாட்டோம் என்று உறுதியாக நிற்கும் ஒரு தலைவராக நமது தளபதியாரும் - நமது உதயாவும் இருப்பார்கள் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது.

ஆகாயத்தாமரை, படர்தாமரை, அதுபோலத்தான் இந்தத் தாமரை. அனைத்தும் நாசம். குளத்தில் சென்றால் குளம் நாசம். இங்கு வந்தால் இது நாசம். நம் மண்ணிற்குள் வந்தால் மண் நாசம்.

எனவே, மக்களாகிய உங்களிடத்தில் மீண்டும் இந்த சந்தோசமான நிகழ்வில், ஒரு அற்புதமான வாய்ப்பை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்து, இந்த நிலத்தில் உங்களோடு சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து, வரும் காலத்தில் நம்மையும் நமது தலைமுறைகளையும் காக்கும் ஓர் இயக்கமாக - என்றைக்கும் இந்த மண்ணுக்கான இயக்கமாக - மக்களுக்கான இயக்கமாக, திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கும். அதை வழிநடத்தும் நமது தளபதியாருக்கு பிறகாக, உதயா அவர்கள் நிச்சயமாக இதை முன்னெடுத்துச் செல்வார் என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது.

இந்த அரிய வாய்ப்பு வழங்கிய உங்கள் அனைவருக்கும் நன்றி கூறி, எனது அருமை அண்ணன் அமைச்சர் சேகர்பாபு அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு கருணாஸ் உரையாற்றினார்.